# எங்கள் குரல்

குழந்தைகளின் இதழ்





பிப்ரவரி ~ 2020

Vol : 1 No: 1



# 'எங்கள் குரல்' ஆசிரியர் குழு

S. ஸ்ரீகுமரன்
7ம் வகுப்பு
குழந்தைகள் வள மையம்
தல்லாகுளம்
மதுரை

S. ஜெயஸ்ரீ
7ம் வகுப்பு
குழந்தைகள் வள மையம்
தல்லாகுளம்
மதுரை

M. தமிழ் நிலா
7ம் வகுப்பு
குழந்தைகள் வள மையம்
பனங்காடி
மதுரை

K.சந்தோஷ் குமார்
8ம் வகுப்பு
குழந்தைகள் வள மையம்
பனங்காடி
மதுரை

P. நாக அர்ஜுன்
6ம் வகுப்பு
குழந்தைகள் வள மையம்
அம்பேத்கர் காலனி
மதுரை

K. ராதாகிருஷ்ணன்
4ம் வகுப்பு
குழந்தைகள் வள மையம்
அம்பேத்கர் காலனி
மதுரை

R. வர்ஷினி
8ம் வகுப்பு
குழந்தைகள் வள மையம்
மீனாம்பாள்புரம்
மதுரை

S. வீரபாண்டி
8ம் வகுப்பு
குழந்தைகள் வள மையம்
மீனாம்பாள்புரம்
மதுரை

M. சுதன் பாலா
6ம் வகுப்பு
குழந்தைகள் வள மையம்
ஜவஹர்லால்புரம்
மதுரை

P. தேவி
8ம் வகுப்பு
குழந்தைகள் வள மையம்
ஜவஹர்லால்புரம்
மதுரை

M. கற்பகலட்சுமி
9ம் வகுப்பு
குழந்தைகள் வள மையம்
தளவாய்புரம்

K. லோகேஷ்
5ம் வகுப்பு
குழந்தைகள் வள மையம்
தளவாய்புரம்

M. மாரிச்செல்வம்
8ம் வகுப்பு
குழந்தைகள் வள மையம்
புங்கவர்நத்தம்

B. ஐஸ்வர்யா
7ம் வகுப்பு
குழந்தைகள் வள மையம்
புங்கவர்நத்தம்

K. மகேஷ்குமார்
7ம் வகுப்பு
குழந்தைகள் வள மையம்
மஞ்சநாயக்கன்பட்டி

M. ராசாத்தி
6ம் வகுப்பு
குழந்தைகள் வள மையம்
மஞ்சநாயக்கன்பட்டி

K. ரெங்கபிரகாஷ்
7ம் வகுப்பு
குழந்தைகள் வள மையம்
மஞ்சநாயக்கன்பட்டி

P.தேன்மொழி
7ம் வகுப்பு
குழந்தைகள் வள மையம்
மஞ்சநாயக்கன்பட்டி

R. ராகவன்
5ம் வகுப்பு
குழந்தைகள் வள மையம்
நற்கலைகோட்டை

S. சத்யா
8ம் வகுப்பு
குழந்தைகள் வள மையம்
நற்கலைகோட்டை

V.சூர்யா
6ம் வகுப்பு
குழந்தைகள் வள மையம்
கீழ ஈரால்

T. தாரணி
7ம் வகுப்பு
குழந்தைகள் வள மையம்
கீழ ஈரால்

S. முத்தமிழ்
7ம் வகுப்பு
குழந்தைகள் வள மையம்
செண்பகா நகர்
கோவில்பட்டி

Released By :
CEDAR
47/23, Thy Grace,
Old Natham Road,
Madurai - 625014

Publishing House :
Pathiyam Prints
P.No : 8, Albert Street
Muta colony, Moolakarai,
Pasumalai, Madurai-625004

*தனிச்சுற்றுக்கு மட்டும்

# எங்கள் குரல் உங்கள் காதுகளில் ஒலிக்கிறதா ?

உண்மையை சொல்லப்போனால் சமீப காலங்களில் குழந்தைகளாகிய எங்களைப் பற்றி பெரியவர்களாகிய உங்கள் குரல், மிக அதிகமாகவே எங்கள் காதுகளில் ஒலிக்கிறது. வீடுகளில், பள்ளிக்கூடங்களில், ஊடகங்களில், சட்டமன்றங்களில், ஏன், ஐ நா சபை போன்ற உலக அரங்குகளில் கூட எங்களுக்கான பாதுகாப்பு, உரிமை, கல்வி, எதிர்காலம், உடல் நலம் என்று பல விஷயங்கள் பேசப்பட்டு வருகின்றன. எங்கள் நலனுக்காக பல கொள்கைகளும் திட்டங்களும் வகுக்கப்படுகின்றன. இருந்தாலும் எங்கள் மூச்சுத்திணறல்கள் ஓய்ந்தபாடில்லை. “டாக்டரும் இஞ்சினியரும் ஆகலேனா எதிர்காலமே இல்ல”என்று எங்கேயோ ஒரு பேரொலி. “நூத்துக்கு நூறு வாங்கலேனா என்ன பிள்ளை நீ?” என்ற ஒரு அங்கலாய்ப்பு. தினம் ஒரு மூட்டை வீட்டுப்பாடம்! செய்து முடிக்கும் போது விடிந்து போகும். யாரோடு பேச, யாருடன் சிரிக்க? யாரிடம் போய் எங்கள் கனவுகளை தைரியமாக பகிர்ந்து மகிழ? குழந்தைகளை மட்டுமல்ல, பெரியவர்களாகிய உங்களையும் எங்கள் இதழை வாசிக்க அழைக்கிறோம். எங்கள் குரல் உங்கள் காதுகளில் இதன் மூலம் ஒலிக்கட்டுமே!

- இதழாசிரியர் குழு



எங்கள் குரல் இதழ் தொகுப்புப்பட்டறை, சிடார் மதுரை அலுவலகம். நாள் : 02.02.2020
**பயிற்சியாளர் : இ. பொன்குன்றம்**, சிடார் குழந்தைகள் வள மைய ஒருங்கிணைப்பாளர்

# சிடார் குழந்தைகள் வள மையங்கள் பற்றி …

சிடார் குழந்தைகள் வள மையத்திற்கு பின்னணியாக ஒரு கால் நூற்றாண்டு சரித்திரம் அடங்கியிருக்கிறது. 1994 ம் ஆண்டு கோவில்பட்டி, சிவகாசி மற்றும் எட்டயபுரம் பகுதிகளில் குழந்தை தொழிலாளர் முறை ஒழிப்புப் பணியை தொடங்கி சுமார் 150 கிராமங்களுக்குச் சென்றடைந்த சிடார், அதன் தொடக்கத்திலிருந்தே குழந்தைகளுக்கான மாற்றுக்கல்வி முயற்சிகளில் ஈடுபட்டு வந்தது. அதன் முதல் அனுபவம் அரசு உதவியோடு நடத்திய "குழந்தை தொழிலாளர் சிறப்பு பள்ளிகள்" என்று கூறலாம். குழந்தை தொழிலாளர்கள் முறை ஒழிக்கப்பட்டாலும் பள்ளிகளை சென்றடைந்த அனைத்துக் குழந்தைகளும் கல்வியின் முழு பயனையும் பெற்றார்களா? என்பது கேள்விக்குறியது. அன்றும் சரி இன்றும் சரி, எங்களது ஆய்வுகள் வலியுறுத்துவது ஒன்றுதான்: சமூகத்தின் விளிம்பு நிலையில் இருந்து வரும் குழந்தைகள் தங்களை 'வறுமை சுழல் வட்டத்தில்' இருந்து உடைத்து வெளியேறுவதற்கு அவர்கள் பெறும் கல்வி போதுமானதாக இல்லை என்பதுதான். அந்த சுழல்வட்டத்தை கீழ் கண்ட படத்தின் மூலம் விளக்கலாம்.




'கல்வி-வறுமை சுழல்வட்டத்தை' உடைத்தெறிய வேண்டும் என்று சொன்னால் குறிப்பாக சமூகத்தின் விளிம்பு நிலையில் இருந்து வரும் மாணவர்களை ஒரு முழுமையான கல்வி சென்றடைய வேண்டும்.

முழுமையான கல்வி (Wholesome Education) என்றால் என்ன?

பள்ளியில் சேர்க்கப்படும் அனைத்து குழந்தைகளும் படைப்பாற்றல் கொண்டவர்கள் என்கின்ற அடிப்படை நம்பிக்கையை கொண்டது தான் இந்த முழுமையான கல்வி (Wholesome Education). இது கல்விக்கான மாற்றுச் சிந்தனையும் கூட. ஒவ்வொரு குழந்தையும் தன் படைப்பாக்கத்தை தன்னுள் இனம் கண்டு ஏற்றுக் கொள்வதன் மூலம் ஒரு அறிவுதேடலில் தாங்களே தங்களை வழி நடத்தி பயணிப்பார்கள். கீழ்க்கண்ட அதன் நோக்கங்கள் அதை மேலும் விளக்கும்.

1. மனப்பாடத்தை கைவிட்டு புரிந்து பயிலும் கல்வி
2. பாடப்புத்தகத்தின் அதிகாரத்திற்கு சவால் விடும் அனுபவ அடிப்படை கல்வி
3. பங்கேற்பற்ற போதிக்கும் முறையை தவிர்த்து அறிவாற்றலை தேடிக் கண்டுபிடிக்கும் கல்வி
4. பகுப்பாய்வை தாண்டி உணர்சித்தளத்தில் உண்மைகளை உணர்த்தும் கல்வி
5. இரண்டாம் நிலை புரிதலை மீறி படைப்பாற்றலை ஊக்குவிக்கும் கல்வி
6. தனித்துவத்தை தளர்த்தி கூட்டுப்படைப்பை ஊக்குவிக்கும் கல்வி
7. பணம், பதவி, அதிகாரம் ஆகியவற்றிற்கு அடிபணியாத பொது நோக்கு கல்வி
8. நடைமுறைகளை கேள்விக்குள்ளாக்கி மாற்றத்தை ஊக்குவிக்கும் கல்வி

இதன் ஆரம்பமாகத்தான் குழந்தைகள் வள மையங்கள் தொடங்கப்பட்டது. இவை ட்யூஷன் மையங்கள் அல்ல. இங்கு கதை சொல்லுதல், வரைதல், வண்ணம் தீட்டுதல், நாடகம் எழுதி நடித்தல், பறை இசைத்தல், புகைப்படம் மற்றும் வீடியோ பதிவுகள் செய்தல், குழந்தைகள் திரைப்படங்களை பார்த்து விமர்சித்தல், குழந்தைகளே குழந்தைகள் இதழை நடத்துதல் ஆகிய நடவடிக்கைகள் மேற் கூறியிருக்கிற நோக்கங்களை சென்றடைவதற்கான மாற்றுப்பயிற்சி முறைகளே. கோவில்பட்டி பகுதியில் பின்தங்கிய 10 கிராமங்களிலும் மதுரை மாநகரில் 7பகுதிகளிலும் எங்கள் மையங்கள் இயங்கி வருகின்றன. சுமார் 500 குழந்தைகளை சென்றடைந்திருக்கிறோம்.

முனைவர். திரு. சின்னராஜ் ஜோசப் ஜெய்குமார்
மேலாண்மை அறங்காவலர், சிடார்

# நாட்டை காக்க செல்வோமே !




பள்ளி கூடம் செல்வோமே;
பாடம் நன்றாய் படிப்போமே;
வெறுப்பு இன்றி வாழ்வோமே:
கல்விதனை கற்போமே!


அறிவு கொடுக்கும் கல்வியினை ,
ஆற்றல் கொண்டு பயில்வோமே;
அறிஞன் ஆக வருவோமே;
அழியாக் கல்வி பெறுவோமே!

இன்று நாங்கள் சிறுவர் தாம்;
ஏற்றம் நாளை அடைவோமே!
நன்று தேர்ந்தே உயர்வோமே;
நாட்டை காக்க செல்வோமே!

ஓவியம்: R. கதிரோவியன்
3ம் வகுப்பு
குழந்தைகள் வள மையம்,
தல்லாகுளம்,
மதுரை.

கவிதை: பா.அஜய்
குழந்தைகள் வள மையம்
4ம் வகுப்பு:
ஊர்: தளவாய்புரம்

# உழவுத்தொழில்



கழனி காட்டை திருத்தி அதில்
கரிசல் மண்ணை கலந்திடவே
உழவு செய்வாய் தம்பி இங்கே
உழைத்தால் காண்பாய் முன்னேற்றம்!

வரப்பு உயர நெல்லுயரும்,
வளம் கொழித்தால் செல்வமாகும்
உரத்தை தூவ பயிர் வளரும்
உழவு தொழிலே மேன்மையடா!

ஏரை பிடிக்கும் கரங்கள் தான்,
ஏற்றம் செய்யும் உரமாகும்!
பாரை உயர்த்தும் தொழிலிதுவே
உழைத்து நாமும் உயர்வோமே!

ஓவியம்: கு. பொன்னுத்தாய்
குழந்தை வள மைய ஊக்குவிப்பாளர்
ஊர் : மஞ்சநாயக்கன்பட்டி

கவிதை : ஜெகதீஸ்வரி
குழந்தை வள மைய ஊக்குவிப்பாளர்
ஊர் : தளவாய்புரம்

# வாத்து



குட்டி குட்டி வாத்து!
குதித்து குதித்து நடக்கும்
குள்ளமணி வாத்து
குவாக்குவா வாத்து!

மெல்ல மெல்ல நடக்குமே!
மேனி தன்னை சிலிர்க்குமே!
செல்லும் நீரை குடிக்குமே!
சேற்றில் புழுவை உண்ணுமே!

வெள்ளை வாத்தை கண்டதும்!
வேடிக்கையாய்ச் சிறுவரும்!
கொள்ளை இன்பம் கொண்டுமே!
கூவி கூவி துரத்துவர்!

ஓவியம் : T. ஜோஷ்வா
2ம் வகுப்பு
சிடார் குழந்தைகள் வள மையம்

கவிதை : A. பார்வதி
2ம் வகுப்பு
சிடார் குழந்தைகள் வள மையம்

# பறை இசை

பறை மிகத் தொன்மை வாய்ந்த இசைக்கருவி என்பது அனைவரும் அறிந்ததே. தமிழிசை பாரம்பரியத்தின் அடிப்படை பறை இசை என்று கூறலாம். ஏனெனில் அது உழைக்கும் மக்களின் வாழ்வியலோடு இணைத்து கட்டமைக்கப்பட்ட கலை. தகவல் தொடர்பு சாதனமாக, போர் முரசாக, உழைக்கும் மக்களின் சோர்வைப்போக்கி எழுச்சியூட்டும் இசைக்கருவியாக பறை பன்முகத்தன்மை பெற்ற இசைக்கருவி. உயர் கலாச்சாரம் என்ற அடிப்படையில் பறையும் பறை இசையும் இன்றுவரை புறக்கணிக்கப்படுவது மற்றொரு வரலாறு. இந்த வரலாறு மிருதங்கமும் ஒரு மாட்டுத் தோலால் ஆன மற்றொரு வகை பறைக்கருவி என்பதை மறுக்கும் வரலாறு. பறையிசை தமிழ் கலாச்சரத்தின் வேர், அதன் தொடர்ச்சியின் அடையாளம், அதன் உயிர் நாளம். அடிமை அடையாளங்களையும் புறக்கணிப்புகளையும், ஏற்றத்தாழ்வுகளையும் முறியடிக்கும் விசையாக பறையிசையாக இன்று குழந்தைகளின் கரங்களிலிருந்து எழுவது ஒரு புது நம்பிக்கையின் முழக்கம் என்று நாங்கள் எண்ணுகிறோம். குழைந்தைகளுக்கு வாரந்தோறும் பறை இசை பயிற்றுவிக்கப்படுகிறது

ரா. ஜெயக்குமார்
திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் பறை இசை பயிற்சியாளர்
சிடார்



## பறையிசை கலை பற்றி எங்கள் குரல்

சிடார் நிறுவனத்தில் கலை பயிற்சி முகாம் நடத்தினார்கள். அதில் பறையிசை பயிற்சினை அளித்தார்கள். எனது பெற்றோர்கள் பறை இசையானது ஒரு இறப்பு நிகழ்வின் போதுதான் இசைப்பார்கள், மேலும் ஒரு குறிப்பிட்ட சாதி வகுப்பினர் தான் இசைப்பார்கள். அதனால் அதனை கற்றுக்கொள்ள வேண்டாம் என்று சொன்னார்கள். பின்னர் சிடார் நிறுவனத்தினர் பறையிசை ஒரு பாரம்பரிய நாட்டுப்புறக்கலை என்றும் யார் வேண்டுமானாலும் இசைக்கலாம். யார் இசைத்தாலும் ஒலி எழும்பும் என்று ஊக்கப்படுதினார்கள். நான் மகிழ்வுடன் கற்றுக்கொண்டேன். எனது பள்ளியில் நடந்த நிகழ்ச்சியில் பறையிசைத்தேன். அனைவரும் பாரட்டினார்கள்.

கார்த்தி,
8ம் வகுப்பு,
புங்கவர்நத்தம்
குழந்தைகள் வள மையம்

# கதை சொல்லல் ஒரு நிகழ்த்துகலை : பயிற்சிப்பட்டறை

கதை சொல்ல நமக்கு கூர்ந்து கவனிக்கும் திறன் மிகவும் அவசியம். கதை சொல்லும் போது தங்கு தடையின்றி கேட்பவர்கள் காட்சிப்படுத்தி பார்க்கும் அளவு உணர்வு பூர்வமாக அவர்களுடன் இணைந்து சொல்ல வேண்டும். நிறைய பயிற்சியும், வாசிப்பும், நிகழ்வுகளை கவனிக்கும் திறனும் ஆர்வமும் இருந்தால் நல்ல கதை சொல்லியாக மாற முடியும். குழந்தைகளின் வளர்ச்சிக்கு இது மிகவும் அத்தியாவசியமான ஒன்று. கதைகளின் பல்வேறு வகைகளும் அதனுள் பல கருப்பொருள் சார்ந்த வகைப்பாடுகளும் இருக்கின்றன. இந்த பயிற்சியில் குழந்தைகள் வள மைய ஊக்குவிப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டதில் மிகுந்த மகிழ்ச்சி.

**முனைவர் காளீஸ்வரன்,**
மாணவ கலை மற்றும் இலக்கிய மையம்
லயோலா கல்லூரி
சென்னை






முனைவர் திரு. காளீஸ்வரன் உடன் சிடார் பணியாளர்கள்,

## கதை சொல்லல் குறித்த ஒரு கதை

எனக்கு கதை கேட்க, சொல்ல மற்றும் எழுதவும் ரொம்ப பிடிக்கும். எனது பாட்டி எனக்கு நிறைய கதைகள் சொல்லி இருக்கிறார். சிடார் கலை பயிற்சி முகாமில், நாடக பயிற்சியின் போது நாடகம் நடிப்பது எழுதுவது பற்றி ஆசிரியர் மிக எளிமையாக பாவனையுடன் நடித்து சொல்லிக் கொடுத்தார்கள். அந்த பயிற்சியின் ஊக்கத்தினால் நானே கதை எழுதினேன். அனைவரும் என் முயற்சியினை பாராட்டினார்கள். சிடார் நிறுவனத்திற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

பார்த்தசாரதி,
5ம் வகுப்பு
குழந்தைகள் வள மையம்
எத்திலியப்பநாயக்கர்பட்டி

# ஒரு மானின் தைரியம்

ஒரு காட்டில் வயிற்றில் குட்டியுடன் ஒரு மான் இருந்தது. அதனைச் சுற்றி நான்கு திசைகளிலும் ஒவ்வொரு ஆபத்து காத்திருந்தது. ஒரு பக்கம் வேட்டைக்காரன் ஒருவன் கையில் அம்புடன் மானை வேட்டையாட காத்திருந்தான். மற்றொரு பக்கம் ஆறு கரை புரண்டு ஓடிக்கொண்டிருந்தது. எதிர் பக்கம் பசியோடு ஒரு புலி மானை வேட்டையாட காத்திருந்தது. அடுத்த பக்கமோ காட்டு தீயோ கொளுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது.மான் எந்த பக்கம் போவதென்று தெரியாமல் பயத்தோடு தவித்துக் கொண்டிருந்தது. தனக்கு என்ன ஆனாலும் பரவாயில்லை தன்னுடைய வயிற்றில் இருக்கும் குட்டிக்கு ஒன்றும் ஆகி விடக்கூடாது என்ற பயத்தோடு அழுது கொண்டிருந்தது. பின்பு தன்னுடைய நிலையை எண்ணி கடவுளிடம் வேண்ட ஆரம்பித்தது. பின்னர் தைரியமாக வேடன் இருக்கும் பக்கம் தன்னுடைய முதல் அடியை எடுத்து வைத்தது. வேடன் மானை நோக்கி அம்பு எய்ய ஆயத்தமாக இருந்தான். அப்போது வானத்தில் திடீரென்று மின்னல் வெட்டியது. அந்த மின்னலின் ஒளி வேட்டைக்காரனின் கண்களை பறித்து விட்டது. அதனால் வேட்டைக்காரனின் அம்பானது புலி இருந்த பக்கம் பாய்ந்ததால் புலி பலியாகியது. அப்போது கனமழை பெய்ததால் காட்டுத்தீ அணைந்து விட்டது. மான் ஆனந்தத்தோடு தன்னுடைய பாதையை நோக்கி சென்றது.

<u>கருத்து</u>:- இந்த கதையிலிருந்து நாம் புரிந்துகொண்டது, நாம் அந்த மானைப் போல எப்போதும் தைரியமாகவும், எந்த ஆபத்தினைக்கண்டும் அஞ்சக்கூடாது. ஆபத்தினை எதிர்கொள்ள வேண்டும். முன் வைத்த காலை பின் வைக்காமலும் இருக்க வேண்டும்.

K.கவியரசன்
8ம் வகுப்பு
சிடார்- குழந்தைகள் வள மையம்
மீனாம்பாள்புரம்.

# கவின் முதல் கௌதாரி வரை

கவினுக்கு பறவைகளை மிகவும் பிடிக்கும். ஒரு நாள் காலையில் கவின் அருகில் உள்ள தோட்டத்திற்குச் சென்றான். ஒரு மரப்பொந்தில் கிளியை பார்த்தான். மரத்தில் ஏறி கிளியை பிடித்தான். கீழே கிடந்த குச்சிகளை பொறுக்கிக் கொண்டான். குச்சிகளை கொண்டு கூண்டு செய்தான். அதில், கிளியை அடைத்தான். கிளி வெளியே விடும்படி கெஞ்சுவது போல் பார்த்தது. அம்மாவிடம் தக்காளி, கொய்யா பழங்களை கேட்டு வாங்கினான். கிளிக்கு உண்ண கொடுத்தான். கிளி எதையும் உண்ணவில்லை. கவின் கவலைப்பட்டான். கிளியை கையில் பிடித்தான். “கொஞ்சும் கிளியே கூண்டு உனக்கு பிடிக்கவில்லையா, பறந்து போ” என்றான். கிளி சிறகடித்து மகிழ்வுடன் பறந்தது. கொடியில் இருந்த கோவைப்பழத்தை கொத்தி தின்றது. கிளி தன் தோழி கௌதாரியை வழியில் கண்டது. விளையாடி மகிழ்ந்தது

ஆ. அய்யனார்
2ம் வகுப்பு
குழந்தைகள் வள மையம்
தளவாய்புரம்

# நாடகபயிற்சி



## நாடகபயிற்சி ஏன்?

• மதிப்பெண் அடிப்படையிலான பள்ளிக்கல்விக்கு தேவையான புத்தகம் சார்ந்த பயிற்சி மட்டுமே அளிக்காமல் கலைப்பயிற்சியின் மூலம் படைப்பாற்றலையும் மாணவர்களின் எதிர்கால வாழ்வை மகிழ்வுடனும் நம்பிக்கையுடனும் எதிர்கொள்ள தேவையான வாழ்வியல் பயிற்சியினை நாடகக்கலை மூலம் வழங்குவதற்கான ஒரு வாய்ப்பாகும்.

• குழந்தைகளின் அன்றாட வாழ்வியல் சூழலில் (வீடு, பள்ளி மற்றும் சமூகத்திலிருந்து) நடக்கும் நிகழ்வுகளிலின் அடிப்படையில் அவர்களே நடித்து காட்டுவதற்கான வாய்ப்பாக இருக்கிறது. இறுதியில் அனைவரும் கலந்துரையாடல் செய்து அவர்களே நன்னெறி பண்புகளையும் தார்மீக மதிப்புகளையும் உருவாக்குவதற்கான ஒரு நல்வாய்ப்பாகும்.

• நாடக கலை (Life Theatre) பயிற்சியானது குழந்தைகளை நடிப்பதற்கு மட்டும் தயார் படுத்தாமல் சூழலுக்கு ஏற்ப அவர்களே செயல்படுதல் (react), கவனித்தல் திறன், குழுவாக பங்கேற்றல், தன்னிச்சையாக செயல்படுதல் மற்றும் விரிந்த உறவுகளை அவர்களிடையே மேம்படுத்துவதற்கு மிகவும் உதவியாக இருக்கிறது

திரு. A. செல்வம்
நாடக பயிற்சியாளர்

## காகமும் மானும்

(நாடகம்)

காகம்: ஏ நண்பா நலமாக இருக்கிறாயா?

மான்: ஏதோ இருக்கிறேன் நண்பா.

காகம்: ஏன் சோர்வாக இருக்கிறாய்? சாப்பிடவில்லையா? வா நான் புல் தேடி தருகிறேன்.

மான்: சரி இவ்வளவு வலியுறுத்துகிறாய் வா போகலாம்.

காகம்: நண்பா புல் இதோ இருக்கிறது. இங்கேயே சாப்பிடு.

மான்: நண்பா புல் தேடி குடுத்ததுக்கு நன்றி.

காகம்: அதெல்லாம் இருக்கட்டும் நண்பா. நண்பனுக்கு இதையெல்லாம் செய்யக்கூடாதா என்ன.

மான்: சரி வா நண்பா இருப்பிடம் செல்வோம்.

காகம்: நண்பா உனக்கு இன்றைக்கு நல்ல மேய்ச்சல் தானே.

மான்: நீ எனக்கு செய்த உதவியை நான் கடைசி வரைக்கும் மறக்கமாட்டேன்.

காகம்: ஒரு நண்பனாக இருந்தால் இதைக்கூட செய்ய முடியாதா

மான்: நீ எனக்கு செய்த உதவி பெரிய விசயம் அல்லவா, சரி நாளைக்கு சந்திப்போம்.

காகம்: சரி நானும் நாளைக்கு வருகிறேன்.

<u>நீதி:</u> ஒருவர் நமக்கு செய்த உதவியை நன்றி மறவாமல் இருக்க வேண்டும்.

பெயர்: மு. முத்து அய்யனேஸ்வரி
வகுப்பு: 5
ஊர்: தளவாய்புரம்

## நாடகப் பாடல்*

முன்னாடி பாக்கணும்
முதுக காட்டக்கூடாது
முன்னாடி பாக்கணும்
முதுக காட்டக்கூடாது
சத்தமா பேசணும்
மற்றவர்களை மறைக்க கூடாது
தேவையின்றி சிரிக்க கூடாது
மற்றவங்க பேசும்போது பேசக்கூடாது
நல்லா நீ படிச்சுக்கோ
நாடகத்தை நடிச்சுக்கோ
இதுதான் விதிமுறை
நாடகத்தின் நடைமுறை
இதுதான் விதிமுறை
நாடகத்தின் நடைமுறை.

R. வர்ஷினி,
8ம் வகுப்பு
சிடார்- குழந்தைகள் வள மையம்,
மீனாம்பாள்புரம்

* பயிற்சியின்போது ஆசிரியர் சொல்லித்தந்தது

## நாடகபயிற்சியின் பலன் :

எனக்கு பொதுவாக கூச்ச சுபாவம் அதனால் யாரிடமும் தைரியமாகவும், தெளிவாகவும் பேச முடியாது. இந்த நாடக பயிற்சியின் மூலமாக அனைவரிடமும் இலகுவாக பழகவும், நான் நினைப்பதை தெளிவாக பேசவும் முடிகிறது. மேலும் என்னால் சுயமாக ஒரு நாடகத்தினை உருவாக்க முடியும். சமீபத்தில் நானும் எனது இரு நண்பர்களும் சேர்ந்து குழந்தைகள் தின விழாவில் எனது நாடகத்தினை அரங்கேற்றினோம்.

R. வர்ஷினி,
மீனாம்பாள்புரம் குழந்தைகள் வள மையம்.

நான் எங்கள் வள மையத்தில் கற்றுக்கொள்வதை பள்ளியில் என் நண்பர்களுடன் பகிர்ந்து கொள்வேன். அவர்களும் மிகுந்த ஆர்வத்துடன் கேட்டு என்னை பாராட்டுவார்கள். எனது வகுப்பாசிரியரும் வெகுவாக பாராட்டுவார்கள். அதனால் நான் வகுப்பறையில் முன்பைவிட கவனத்துடனும் ஆர்வமாகவும் பங்கேற்கிறேன். எனது ஆசிரியர் என்னை மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருக்கிறேன் என்று பாராட்டுவது மிகுந்த மகிழ்வையும் பெருமிதத்தையும் அளிக்கிறது.

அரவிந்த்,
மீனாம்பாள்புரம் குழந்தைகள் வள மையம்.

# புத்தகத்தின் மதிப்பு *

(நாடகம்)

## காட்சி -1

இடம்: பள்ளிக்கு அருகாமையில் உள்ள மைதானம்.

நாடக மாந்தர்கள்: மனோஜ், சுந்தர்,வீரபாண்டி

(மூன்று பொருட்கள் மைதானத்தில் கிடந்தன. அதைநோக்கி இருவர் வருகின்றனர்.)

சுந்தர் : டேய் மனோஜ் இங்க பாருடா மூணு பொருள் கிடக்கு.

மனோஜ் : ஆமாடா. lunch box ம் snacks box, ஒரு புக் வேற இருக்குடா.

சுந்தர் : நான் இந்த lunch box ஐ எடுத்துக்க போறேன்டா.

மனோஜ் : அப்ப நான் இந்த snacks box ஐ எடுத்துக்கிறேன்.

(அப்பொழுது வீரபாண்டி வருகிறான்.)

சுந்தர் : என்னடா, வீரபாண்டி late ஆ வர. நாங்க இரண்டு பெரும் இங்க வேகமா வந்ததுனால எங்களுக்கு lunch box, snacks box கிடைச்சுது. உனக்கு இந்த book தான் இருக்கு.

(வீரபாண்டி பேசாமல் புத்தகத்தை எடுத்து செல்கிறான்.)

## காட்சி-2

( மறுபடியும் மூவரும் மைதானத்திற்கு வருகிறார்கள். முதலில் வீரபாண்டி வருகிறான்)

நேத்து போலவே அதே மூன்று பொருட்களும் உள்ளன.

(வீரபாண்டி மீண்டும் புத்தகத்தை மட்டும் எடுத்துக்கொள்கிறான். அப்போது சுந்தரும், மனோஜும் வருகிறார்கள்.)

சுந்தர் : அச்சச்சோ இன்னைக்கு ரொம்ப லேட்டாயிருச்சுடா. வாடா சீக்கிரமா போவோம்.

மனோஜ் : ஆமான்டா ரொம்ப லேட்டாயிருச்சு.நேத்து மாதிரி பொருள் இருக்கா இல்லையான்னு தெரியலையே.

(இருவரும் மைதானத்திற்கு வந்துவிட்டனர்.)

சுந்தர் : அப்பாடா பொருள் எல்லாம் அப்படியே இருக்குடா.

மனோஜ் : ஆமா ஆமா என் snacks box இருக்கு.

சுந்தர் : என்னது உன் snacks box ஆ?

மனோஜ் : யாரோடதோ தான். ஆனா நாம தான பாத்தோம். அதனால இது நம்மது தான்.

சுந்தர் : வீரபாண்டி முன்னாடியே வந்துட்டான்டா

மனோஜ் : ஆமா அப்பறம் ஏன்டா இந்த book ஐ மட்டும் எடுத்துகிட்டான். lunch box இல்ல snacks box ஐ எடுத்துருக்கலாம்ல.

வீரபாண்டி :நீ எடுத்த lunch boxல உள்ள சாப்பாடு சந்தோஷம் கொஞ்ச நேரம் தான். அது போல மனோஜ் எடுத்த snacks சாப்பிட்டதும் அதோட சந்தோஷமும் கொஞ்ச நேரம் தான். ஆனா இந்த book அ படிக்கிறப்போ கிடைக்கிற சந்தோஷம் எனக்கு வாழ்நாள் முழுவதும் கிடைக்கும்.

(திரை)

கருத்து : புத்தகத்தை படித்தால் அது எப்போதும் நம் நினைவில் இருக்கும்.

ச. வீரபாண்டி
8ஆம் வகுப்பு,
CEDAR – குழந்தைகள் வள மையம்,
மீனாம்பாள்புரம்

* பயிற்சியின்போது ஆசிரியர் சொல்லித்தந்தது

# வரைதலும் வண்ணம் தீட்டலும்

"வரைதல் குழந்தைகளுக்கு நாம் தரும் ஒரு விலைமதிப்பற்ற வெகுமதி. பார்க்கும் கண்களை, பேசும் விரல்களை புலன் உணரும் ஆன்மாக்களை குழந்தைகளுக்கு கிடைக்கப் பெறச்செய்வது" என்றார் மாண்டிசோரி அம்மையார். அதே போன்று வண்ணம் தீட்டுதல், சிந்தனை வெளிப்படுத்தும் அமைதி என்றும், காண்பவற்றின் இசை என்றும் கூறுகிறார் மற்றொரு கலைஞர். சிடார் குழந்தைகள் வள மையங்கள், வரைதலையும், வண்ணம் தீட்டுதலையும் கொண்டு குழந்தைகளின் படைப்பாற்றலுக்கு ஊட்டமளிக்கிறது என்பது மிக மகிழ்ச்சிக்குரிய ஒன்று. விசித்திர வடிவங்களும், ஒளிவண்ணங்களும் கொண்டு குழந்தைகள் படைக்கும் உலகில், வெல்பவர்களும், தோற்பவர்களும் இல்லை, படைத்து மகிழ்பவர்கள் மட்டுமே. இது எங்கள் கல்விச் சித்தாந்தமும் கூட.

சிடார் ஓவிய பயிற்சியாளர்









படம் வரைய பிடிக்கும் ...

எனக்கு படம் வரைய ரொம்ப பிடிக்கும். ஆனால் அதற்கான அடிப்படை தெரியாது. எனக்கு சொல்லிக்கொடுக்கவோ ஊக்கம் அளிக்கவோ ஆளில்லை. சிடார் வள மையத்தில் படிப்பதினால்தான் அவர்கள் கலை பயிற்சி முகாமில் கலந்து கொள்கின்ற வாய்ப்பினை பெற்றேன். அங்கு ஓவிய ஆசிரியர் படம் வரைவதற்கான நுணுக்கங்களை கற்று கொடுத்தார். ஒரு கோட்டிலிருந்து எவ்வாறு படம் வரையலாம், ஒரு பொருளை பார்த்தவுடன் அதன் வடிவம் எப்படி இருக்கிறது, எப்படி வரைந்தால் அந்த வடிவத்தினை எளிதாக வரைய முடியும் என்பதனை கற்றுக் கொண்டேன்.

மாரிசெல்வம், 8ம் வகுப்பு,
குழந்தைகள் வள மையம்
புங்கவர்நத்தம்


# குழந்தைகளின் கைவண்ணங்கள் :



S. விஜய தர்ஷினி
5ம் வகுப்பு
நற்கலைகோட்டை



வீரலட்சுமி
5ம் வகுப்பு
நற்கலைகோட்டை



பொன்மலர்
3ம் வகுப்பு
நற்கலைகோட்டை




P. பாண்டி மீனா
7ம் வகுப்பு
தல்லாகுளம்,
மதுரை.




R. ராகவன்
5ம் வகுப்பு
நற்கலைகோட்டை



சு. சத்யா
ரிடார்
குழந்தைகள் வள மையம்
நற்கலைகோட்டை

K. ஆனந்த செல்வி
4ம் வகுப்பு
சிடார் ககுழந்தைகள் வள மையம்
தளவாய்புரம்



K. ராஜலட்சுமி
7ம் வகுப்பு
சிடார் குழந்தைகள் வள மையம்
தல்லாகுளம்
மதுரை







ஆ. அய்யனார்
4ம் வகுப்பு
சிடார் குழந்தைகள் வள மையம்
தளவாய்புரம்




K. சிவரஞ்சினி
3ம் வகுப்பு
சிடார் குழந்தைகள் வள மையம்
தளவாய்புரம்



ரா. ராகவன்
4ம் வகுப்பு
சிடார் குழந்தைகள் வள மையம்
தளவாய்புரம்



S. தினேஷ் கார்த்திக்
4ம் வகுப்பு
சிடார் குழந்தைகள் வள மையம்
தளவாய்புரம்



சு..சத்யா
8ம் வகுப்பு
சிடார் குழந்தைகள் வள மையம்
நற்கலைகோட்டை



K. ஆனந்த செல்வி
4ம் வகுப்பு
சிடார் குழந்தைகள் வள மையம்
தளவாய்புரம்



S. ஜெயஸ்ரீ
7ம் வகுப்பு
சிடார் குழந்தைகள் வள மையம்
தல்லாகுளம்




பா.இராஜேஸ்வரன்
சிடார் குழந்தைகள் வள மையம்
வெ.தளவாய்புரம்




ஆ.பார்வதி
2ம் வகுப்பு
சிடார் குழந்தைகள் வள மையம்
தளவாய்புரம்

காயத்ரி மகாலட்சுமி
4ம் வகுப்பு
சிடார் குழந்தைகள் வள மையம்
தளவாய்புரம்



# புகைப்பட பயிற்சி

கேமரா 1826 - இல் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் கண்டுபிடிக்கப்பட்ட காலம் தொட்டு வெகு காலங்களாக அது பணம் படைத்த மனிதர்கள் மட்டுமே பயன்படுத்தும் கருவியாக இருந்து வந்தது. இதனால் புகைப்படம் எடுத்தல் என்பது இம்மக்கள் தங்கள் வாழ்கை நிகழ்வுகளை பிம்பபதிவுகளாக சேமிப்பதற்கு மட்டுமே பயன்பட்டு வந்தது. ஒரு புகைப்படம் பல ஆழமான கருத்துகளை உணர்த்தும் கலை வடிவமாக அந்நாட்களில் உருவெடுக்கவில்லை. எப்போது கேமரா சாமானியர்களும் பயன்படுத்தும் நிலை ஏற்பட்டதோ அப்போதுதான் புகைப்படம் அதன் கலை ஆற்றலை பெறத்தொடங்கியது. புகைப்படக்கலை எந்த அளவிற்கு சக்தி வாய்ந்தது என்றால் ஒரு யுத்தத்தையே நிறுத்தக்கூடிய வலிமை பெற்றது. வரலாற்றில் அதற்கு பல ஆதாரங்கள் உண்டு .1990 முதல் தொடங்கிய டிஜிட்டல் தொழில் நுட்பம் அதிநவீன கேமராக்களை உலகின் அனைத்து மூலைகளிலும் சாமானியர்களின் கைகளில் தரத்தொடங்கியது மற்றொரு கலை புரட்சிக்கான ஆரம்பம். இந்த புகைப்பட கலையை வெறும் தொழில்நுட்ப அறிவாக இல்லாமல் படைப்பாற்றலாக சிடார் குழந்தைகளுக்கு பயிற்சி அளித்து வருகிறோம். குழந்தைகளின் சிந்தனை திறன் மழுங்கடிப்பட்டு கொண்டிருக்கும் இந்த கால கட்டத்தில் புகைப்பட கலை பயிற்சி குழந்தைகள் படைப்பிற்கான சிறந்த வடிகாலாக அமையும் என்பது மறுக்கமுடியாத உண்மை.

திரு. இ. பொன்குன்றம்
சிடார் குழந்தைகள் திட்ட ஒருங்கிணைப்பாளர்





## புகைப்பட கலை பற்றி

எனக்கு புகைப்படம் எடுக்க மிகவும் பிடிக்கும். எனது பெற்றோரின் கைப்பேசியில் எடுப்பேன். சிடார் மையத்தில் நடத்தப்பட்ட 2 நாள் கலைப்பயிற்சி முகாமில் புகைப்படம் எடுக்க புகைப்பட கருவியினை வைத்து சொல்லிக்கொடுத்தார்கள். எவ்வாறு ஒரு காட்சியை அணுக வேண்டும், அருகில் இருந்து எதை எடுக்க வேண்டும், தொலைவில் இருந்து எதை எடுக்க வேண்டும் என்பவைகளே நாம் எடுக்கும் புகைப்படங்களுக்கு உயிர் கொடுக்கும் என்பதனை தெரிந்து கொண்டேன். சிடார் வள மையத்தில் படிப்பதினால்தான் எனக்கு இந்த அரிய வாய்ப்பு கிடைத்தது. அதற்கு நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

காயத்ரி,
8ம் வகுப்பு,
குழந்தைகள் வள மையம்
கீழ ஈரால்

## கோவில்பட்டியில் 27 செப்டம்பர் 2019 அன்று நடைபெற்ற முகாமில் குழந்தைகள் எடுத்த புகைப்படங்களில் சில...


























# குழந்தைகள் திரைப்படம்

## எதற்காக குழந்தைகள் திரைப்படம் ?

இன்றும் கூட குழந்தைகள் திரைபடங்கள், அதிக கறைபடாத கலையாகவே இருக்கிறது என்று கூறலாம். இத்திரைப்படங்களை வெறும் கேளிக்கையாக மட்டும் பார்க்க வேண்டிய அவசியமில்லை. தரமான குழந்தைகள் திரை படங்கள் குழந்தைகளை, ஜாதி, மத, அரசியல், கலாசாரம் மற்றும் பூகோள எல்லைகளை தாண்டிய ஒரு 'குழந்தைகள் உலகிற்கு' எளிதாக அழைத்துச் செல்லும். குழந்தைகளை ஆளும் கற்பனை, பயம், நட்பு, குறும்பு, தேடல் போன்ற குழந்தை உளவியல் சார்ந்த பண்புகளை கையாளக்கூடியதாக இத்திரைப்படங்கள் அமைகின்றன. தேர்வு செய்த படங்களை குழந்தைகளுக்காக திரையிடுவதின் மூலம் திரைப்படத்தை ஒரு கலை அழகியலை அவர்களுக்கு அறிமுகம் செய்கிறோம். மேலும் இச்சமூகத்தில் அவர்கள் பண்புடன் வாழ்வதற்கு அவசியமான, ஆழமான கருத்துக்களை குழந்தைகளின் புரிதலுக்கு ஏற்றாற்போல் முன் வைக்கிறோம். அனிமேஷன் படங்கள் குழந்தைகளிடம் அதிக செல்வாக்கை பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. ஒரு நல்ல குழந்தைகள் திரைப்படத்தை திரையிடுவதை காட்டிலும் எளிமையான ஆனால் கருத்துச்செரிவான வேறொரு கலை நிகழ்வை நிகழ்த்திக்காட்டுவது கடினம். காட்சி ஊடக தொழில் நுட்பம் நமக்குச்சாதகமாக உருவாகியிருக்கும் தருவாயில் குறுகிய எல்லைகளை மீறி விரியும் ஒரு களங்கமற்ற உலகை குழந்தைகள் கண்டு ரசிக்கட்டுமே!



திரு. ரா. கார்த்திக் ,ஒருங்கிணைப்பாளர் , குழந்தைகள் திரைப்படம் மற்றும் விமர்சனம்

## ஆழ்துளையிடம் ஒரு கேள்வி

நீ ஆழ்துளை தானே.....பிறகு
ஏன் ஆளை துளைக்கிறாய்.
பெண்ணையும்,மண்ணையும் ஏமாற்றுபவனுக்கு
சிறை தண்டனை மட்டுமே.... ஆனால்
கள்ளங்கபடமில்லா குட்டி இதயம்
புல்வெளியில் உலகை அறிய சென்றதுக்கு
மரண தண்டனையா...
அதில் யார் குற்றவாளி...
பதில் சொல் ஆழ்துளையே
நீ என்ன செய்வாய்
உன்னை துழைத்ததும்
எம் பெரியவர்கள் தானே !

நீரின்றி அமையாது உலகு –இனி
போரின்றி (borewells) நீரெடுக்க பழகு
தண்ணீரின்றி நித்தம் – அங்கு
தாகமென சத்தம்
அதனால்தானோ பூமியுடன் ஓர் யுத்தம்....
தோல்வியை தழுவிய மனிதன்
அப்படியே விட்டுவிட்டு ஓடிவிட....
யாரோ...எதற்கோ...
வெட்டிய குழிதான் உன்
சவக்குழியானதோ.....

மரத்தை வெட்டி
மாடிவீடு கட்டி...
மறுநாள் குடியேறி...
தண்ணீரின்றி அடுத்தவர் படியேறி...
கடையிசில் ஆழ்துளை தான்
என முடிவெடுத்து
மரம் இருந்த இடத்திலே
மனிதனவன் தோண்டுகிறான்....
சிறிது தோண்டியதும்
மண்வெட்டியில் சிக்கிய
வேர் சொன்னது
அன்றே மரத்தை வெட்டாமலிருந்தால்
இன்று நீ அலைய தேவையில்லை.

- கு. பொன்னுத்தாய்
குழந்தை வள மைய ஊக்குவிப்பாளர்

## அறியா பருவம் ஆழ்துளை என்று தெரியா விவரம்

வண்ணமயில் தேரோட்டம்
வீதியிலே ஒரே கூட்டம்
தீபாவளி ஆர்ப்பாட்டம்..
சுஜித் இன் போராட்டம்...

ஒத்தையிலே போனவனே
ஊர் வணங்கும் காவலனே..
ஒத்தையில போறப்ப ஒரு பயலும் கேட்கல...
குழியில விழுந்ததும் சட்டென்று தூக்க
ஆளில்ல
தவியா தவிச்ச
உள்ள தாகத்துல துடிச்ச
கருவி வீணா போச்சாம்
தோண்ட நேரம் ஆச்சாம்
கண்ணு ஒன்னும் தெரியல
திருச்சிக்காரன் உன்னால திரும்ப வர முடியல
ஆழ்துளை என்று அறிய பருவமோ
ஆண்மகன் உனக்கு தெரியா விவரமோ
ஒரு பக்கம் உன்னை எடுத்தாங்க என்று
பேச்சு
மறுபக்கம் உன்னை எடுக்கவில்லை என்று
மூச்சு
பேச்சு மூச்சு
இரண்டும் இறுதியில்
கதையாகி போச்சு...

S.பிரவீன்
2ம் வகுப்பு
சிடார் குழந்தைகள் வள மையம்
மஞ்சநாயக்கன்பட்டி

# ஆழ்துளை கிணறுகள்

நீர்ப்பாசனத்திற்கு அதிக அளவில் ஆழ்துளை கிணறு பயன்படுத்துவதில் இந்தியா முதல் இடம் வகிக்கிறது.தமிழகத்தில் மட்டும் சுமார் 20 லட்சம் ஆழ்துளை கிணறுகள் உள்ளதாக கூறப்படுகிறது. ஒரு கிணறு தோண்ட 1 லட்சம் செலவு செய்ய தயாராக இருக்கும் நாம் அது பயன்படாமல் இருக்கும்போது அதை மூடுவதற்கு 1000 ருபாய் செலவு செய்வதில்லை. ஆழ்துளை கிணறு மூடப்படாமல் விடுவதால் 10 வயது வரை உள்ள குழந்தைகள் அதன் உள்ளே விழுந்து விட நேரிடுகிறது.கடந்த அக்டோபர் மாதம் சுஜித் என்ற சிறுவன் மூடாமல் இருந்த ஆழ்துளை கிணற்றில் விழுந்து உயிரிழந்தான். இச்சம்பவம் தமிழகத்தையே துயருக்குள் ஆழ்த்தியது'

## சில கவிதைகள்

ஆழ்துளை கிணற்றில் மரணம்,
சுடுகாட்டில் சரணம்,
இது எதற்கு நமக்கு வரணும்.

சந்தோசமாய் விழுந்தேன்,
சோகமாய் மறைந்தேன்.
வாழ்க்கை பலமுறை வாழ நினைத்தேன்
ஆனால்
ஒரு முறை கிணற்றில் விழுந்தேன்,

சோகத்தை தந்தேன்.

உயிரோடு வா மகனே உறவாட வா மகனே

பெ. தினேஷ் கண்ணன்
9ம் வகுப்பு
சிடார் குழந்தைகள் வள மையம்
மஞ்சநாயக்கன்பட்டி

சோளக் கொல்லையிலே
சொல்லாம போனவேனே....
மீளவழி இல்லாம
நீளவழி போனவனே....

கருக்குழியிலுருந்து
கண்தொறந்து வந்ததுபோல்
எருக்குழியிலுருந்து
எந்திரிச்சு வந்திரப்பா,

ஊர் உலகம் காத்திருக்கு
உறவாட வா மகனே
ஒரே ஒரு மன்றாட்டு
உசுரோட வா மகனே,

ச. மாரிச்செல்வம்
10ம் வகுப்பு
சிடார் குழந்தைகள் வள மையம்
மஞ்சநாயக்கன்பட்டி

தமிழகம்
உனக்கு
கண்ணீர்
அர்ப்பணிக்க...

என் கவிதை
கண்ணீர்
சிந்துகிறது.....
கண்ணே...

ரா. நந்தினி
6ம் வகுப்பு
சிடார் குழந்தைகள் வள மையம்
மஞ்சநாயக்கன்பட்டி

1)
சாவி இல்லாத பூட்டை " மனிதன்"
உருவாக்குவதில்லை
அதுபோல
"தீர்வு"
இல்லாத
பிரச்சனைகளை
இறைவனும்
அனுமதிப்பதில்லை

2)
கஷ்டபடுகிறவன் கிட்ட
சிரிப்பு இருக்காது...
சிரிக்கிறவன் கிட்ட
கஷ்டம் இருக்காது...ஆனால்
கஷ்டத்திலும் சிரிக்கிறவன் கிட்ட
தோல்வி இருக்காது.

ப. சுபகிருஷ்ணமூர்த்தி
10ம் வகுப்பு
சிடார் குழந்தைகள் வள மையம்
மஞ்சநாயக்கன்பட்டி

# அண்ணல் டாக்டர்.பீ ஆர் அம்பேத்கர்



டாக்டர். பீஆர் அம்பேத்கர் மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள அம்பவாடா என்னும் கிராமத்தில் ஒரு சிறு குடும்பத்தில் பிறந்தார். இவரது பெற்றோர் இராம்ஜி சாக்பால், பீமா பாய் இவர்களுக்கு 14 வது குழந்தையாக ஏப்ரல் 14 1891 அன்று பிறந்தார். இவர் தந்தை தனது மகன் மகாபாரத பீமனைப் போல வீரனாக வரவேண்டும் என்று பீம் என பெயர் சூட்டினார். இவர் எல்பின்ஸ்டோன் பள்ளியில் பள்ளி படிப்பை முடித்தார். பரோடா மன்னர் உதவியால் பல்வேறு கல்லூரிகளில் படித்து பட்டங்களை பெற்றார்.1913இல் இளங்கலை பட்டமும், 1915,1916களில் முதுகலை பட்டமும், 1922 இல் பாரிஸ்டர் பட்டமும் பெற்ற அம்பேத்கர், 1927இல் முனைவர் பட்டம் பெற்றார். ,

ஒரு முறை மாட்டு வண்டியில் தனது சகோதரருடன் சென்று கொண்டிருந்த பொழுது இவர்கள் ஒடுக்கப்பட்ட சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்பதை வண்டிக்காரன் அறிந்ததும் இவர்களை குப்பை கொட்டுவதை போல கொட்டிய கொடுமை நிகழ்ந்தது.

இதுபோல, தன் இளமைப்பருவத்தில் டாக்டர் அம்பேத்கர், தீண்டாமை கொடுமையினால் பல இன்னல்களுக்கு ஆளானார். அவர் படித்த உயர்நிலை பள்ளியில் ஒடுக்கப்பட்ட மாணவர்கள் தனியே அமர்த்தப்பட்டனர். மற்ற மாணவர்களுடன் பேசவோ விளையாடவோ முடியாது. அவர்களது குறிப்பேடுகளையும், புத்தகங்களையும், தொடமாட்டார்கள். தண்ணீர் வேண்டுமானாலும் பிறர் ஊற்ற அவர்கள் கையால் பருக வேண்டும். அமருவதற்கு இம்மாணவர்கள் ஒரு கோணிப்பையை தங்களது வீட்டிலிருந்து கொண்டு வர வேண்டும். இக்கொடுமைகளை கண்ட அம்பேத்கரின் பிஞ்சு மனம் வெம்பியது.

அனைத்து இன்னல்களையும் கடந்து அம்பேத்கர், ஒடுக்கப்பட்ட சமுதாயத்தினருக்காக தன் வாழ்க்கையை அர்ப்பணித்தார். பட்டியல் சாதி மக்களுக்கென கழகம் ஒன்றை தொடங்கியவர்.பரோடா மன்னருடன் இணைந்து தீண்டாமை ஒழிய போராடினார். பொருளாதாரம், வரலாறு, அரசியல், தத்துவம், சட்டம் ஆகிய துறைகளில் தேர்ந்து, ஆசிரியராகவும்,இதழாளராகவும், எழுத்தாளராகவும், சமூகநீதி புரட்சியாளராகவும் விளங்கினார்.ஒடுக்கப்பட்ட மக்களின் அரசியல் அதிகாரம் பெற்றிட லண்டன் மாகாணத்தில் வட்டமேசை மாநாட்டில் பங்கேற்று இரட்டை வாக்குரிமையை பெற்றுத்தந்தார். காந்தியடிகளின் பூனா ஒப்பந்தத்தால் இரட்டை வாக்குரிமை நிறைவேற்ற இயலாமற்போனது. இவர் இந்திய விடுதலைக்கு பின்னர் நாட்டின் முதலாவது சட்ட அமைச்சராக பதவியேற்றார். சாதி இழிவு ஒழிய இந்துமத வெளியேற்றம் சரி என்கிற அடிப்படையில் பல லட்சம் ஆதரவாளர்களோடு புத்த மதம் தழுவினார்.இவையாவற்றுக்கும் மேலாக இந்திய அரசியலமைப்பு சாசனத்தை வரைவதற்கான குழுவின் தலைவராக பொறுப்பேற்று அரசியலமைப்புச் சட்டத்தை வரைவு செய்தார்.

தனது 65வது வயதில் டிசம்பர் 6 1956ல் டாக்டர். அம்பேத்கர் இயற்கை எய்தினார். அவரது நினைவாக உலகில் பல்வேறு இடங்களில் அவரது திருவுருவச்சிலை அமைக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் மிகச்சிறந்த உயரிய விருதான பாரத ரத்னா விருது இவரது இறப்புக்குப்பின் 1990ல் வழங்கப்பட்டது.

கட்டுரை: K. மீனா<br>9ம் வகுப்பு<br>சிடார் குழந்தைகள் வள மையம்<br>அம்பேத்கர் காலனி<br>மதுரை

ஓவியம் : M. மாரிச்செல்வம்<br>8ம் வகுப்பு<br>குழந்தைகள் வள மையம்<br>புங்கவர்நத்தம்

# நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்



சுபாஷ் சந்திர போஸ், நேதாஜி என்று இந்திய மக்களால் அழைக்கப்படும் ஓர் மாபெரும் இந்திய சுதந்திர போராட்ட தலைவர்களுள் ஒருவர். இந்தியா உடனடியாக சுதந்திரம் அடைய வேண்டும், அதற்கு ஒரே வழி போர் மட்டுமே, என தீர்மானித்து இந்திய தேசிய ராணுவத்தை உருவாக்கினர்.

இந்திய விடுதலை வீரரான நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்கள் 1897ம் ஆண்டு ஜனவரி மாதம் 23 நாளில் ஒரிசா மாநிலத்தில் உள்ள கட்டாக் என்ற இடத்தில் ஜானகிநாத் போஸ், பிரபாவதி தேவிக்கும் ஒன்பதாவது மகனாக வங்காள இந்து குடும்பத்தில் பிறந்தார்.

1919ல் நடந்த ஜாலியன் வாலாபாக் படுகொலை சம்பவம் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சுதந்திர போராட்டத்தில் ஈடுபட வழிவகுத்தது.

இந்தியா திரும்பிய நேதாஜி இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியில் இணைந்தார். சி.ஆர்.தாசை அரசியல் குருவாக கொண்டு ஈடுபட தொடங்கினார்.

இந்திய தேசிய ராணுவத்தை கொண்டு 1944ல்ஆங்கிலேயரை எதிர்த்தார். ஆனால் இந்திய ராணுவம் பல காரணங்களை கொண்டு தோல்வியை தழுவி பின்வாங்கியது, இந்த நிலையில் ஆகஸ்டு 18, 1945ஆம் ஆண்டு நேதாஜி சென்ற விமானம் பர்மோசா தீவுக்கு அருகே விபத்துக்குள்ளாகி அவர் மரணமடைந்ததாக செய்திகள் வெளியாகின.

S. ஸ்ரீகுமரன்
7ம் வகுப்பு
சிடார் குழந்தைகள் வள மையம்
தல்லாகுளம்
மதுரை

ஓவியம் : P. கார்த்திக்கேயன்
7ம் வகுப்பு
சிடார் குழந்தைகள் வள மையம்
தளவாய்புரம்

# பெருந்தலைவர் காமராஜர்



குழந்தைகளுக்கு கல்வி என்று சொன்னால் முதலில் நினைவுக்கு வருவது நம் பெருந்தலைவர் காமராஜர். நம் கல்விக்கண்ணை திறந்து வைத்தவர். பிள்ளைகளிடம் நிறைய அன்பும் பாசமும் வைத்தவர். முதன் முதலில் கிராமங்களில் ஆரம்ப பள்ளிகளை தொடங்கி வைத்தார். ஏழைக் குழைந்தைகளுக்காக சத்துணவு திட்டத்தைகொண்டு வந்தார். பள்ளிகளில் படிக்கும் குழந்தைகள் ஏழை, பணக்காரன் என்கிற வேறுபாடு இல்லாமல் இருக்க சீருடைத்திட்டத்தை கொண்டு வந்தார். நம் காமராஜர் அவர்கள் சிறு வயதிலேயே படிப்பை நிறுத்தியதால், வரும் காலத்தில் குழந்தைகளுக்கு கல்வி என்றால் என்ன என்பதை கற்றுத்தர வேண்டும் என்று நினைத்தார். இவர் முதல்வராக பணியாற்றினார். இவரை பெருந்தலைவர், படிக்காதமேதை, கருப்பு காந்தி, கர்மவீரர் காமராஜர் என்றும் சொல்லலாம். நாமும் வருங்காலத்தில்,

"கல்வி கற்போம்"

"வாழ்வில் உயர்வோம்"

தாரணி
முத்து ராசாத்தி
நரேஷ்
சிடார் குழந்தைகள் வள மையம்
கீழ ஈரால்

ஓவியம் : K. அரிராம் பெருமாள்
9ம் வகுப்பு
சிடார் குழந்தைகள் வள மையம்
மஞ்சநாயக்கன்பட்டி

# பழமொழிகள் தொகுப்பு

• யானை வரும் பின்னே
மணி யோசை வரும் முன்னே.
• ஆடிக் காற்றில் அம்மியும் பறக்கும்.
• ஆடிப்பட்டம் தேடி விதை.
• சீரைத் தேடினேன் இறை தேடு.
• அகல உழுவதை விட ஆழ உழுவது மேல்.
• ஆலும் வேலும் பல்லுக்குறுதி
நாளும் இரண்டும் சொல்லுக்குறுதி.
• யானைக்கு ஒரு காலம் வந்தால்,
பூனைக்கு ஒரு காலம் வரும்.

க.மாலதி குமாரி
5ம் வகுப்பு
சிடார் குழந்தைகள் வள மையம்
மஞ்சநாயக்கன்பட்டி

• காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு.
• நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
• அகல உழுவதை விட ஆழ உழுவதே மேல்.
• காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.
• அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
• பெண்கள் நாட்டின் கண்கள்.
• பதறாத காரியம் சிதறாது.
• நல்ல அறிவுரை விலைமதிப்பற்றது.
• மின்னுவதெல்லாம் பொன்னல்ல.


மு. முத்து அய்யனேஸ்வரி
5ம் வகுப்பு
சிடார் குழந்தைகள் வள மையம்
தளவாய்புரம்

• சினம் கொள்ளாதே.
• ஒரு நிமிட கோபம் ஓராயிரம் வருட புகழையும் அழித்துவிடும்.
• கல்வியே சிறந்த செல்வம்.
• உண்மை பலம் வாய்ந்தததாக இருப்பதால் அது ஜெயிக்கும்.
• மரம் தனக்காக பழுப்பதில்லை.
• சேமிப்பும் சிக்கனமும் வாழ்க்கைக்கு அவசியம்.
• கண் தானம் செய்வீர்.
• நோயற்ற வாழ்வு குறைவற்ற செல்வம்.
• மரம் வளர்ப்போம் மழை பெறுவோம்.
• அகம் குளிர முகம் மலரும்.

கி. ஆனந்த செல்வி.
4ம் வகுப்பு
சிடார் குழந்தைகள் வள மையம்
தளவாய்புரம்

• வாய்விட்டு சிரித்தால் நோய் விட்டு போகும்.
• கூழானாலும் குளித்து குடி.
• கந்தலானாலும் கசக்கி கட்டு.
• அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு.
• மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
• குறைகுடம் கூத்தாடும்.
• குறைக்கிற நாய் கடிக்காது.
• அரசன் அன்று கொல்வான்.தெய்வம் நின்று கொல்லும்.
• முயற்சி திருவினையாக்கும்.
• தவளை தன் வாயால் கெடும்.
• பசுமரத்து ஆணி போல.

க. காயத்ரி மகாலட்சுமி.
6ம் வகுப்பு
சிடார் குழந்தைகள் வள மையம்
தளவாய்புரம்



## எங்கள் ஊர்த் திருவிழா

திருவிழாவாம் திருவிழா
எங்கள் ஊர்த்திருவிழா
ஊர் கூடும் திருவிழா
உறியடிக்கும் திருவிழா
ஆடி சேர்ந்து அனைவரும்
கூடி பாடும் திருவிழா
கரகம் தலையில் தாங்கியே
களித்து ஆடும் திருவிழா.

க.மாலதி குமாரி
5ம் வகுப்பு
சிடார் குழந்தைகள் வள மையம்
மஞ்சநாயக்கன்பட்டி

## எங்கள் ஊரின் முளைப்பாரி திருவிழா பாடல்

ஓரிலையாம் முளைப்பாரி
ஓரிலைக்குங் காப்புக்கட்டி
ஒரு பானை பொங்கலிட்டு
முளைப்பாரி போடுங்கம்மா
தன்னா னன்னே போடுங்கம்மா

காயத்ரி
8ம் வகுப்பு
சிடார் குழந்தைகள் வள மையம்
- கீழ ஈரால்

## எங்கள் ஊர்த் திருவிழா

எங்கள் ஊரில் மூன்று நாள் திருவிழா நடைபெற்று கொண்டிருக்கிறது. வருடம் ஒரு முறை நடைபெறும். அப்போது ஊரில் உள்ள அனைத்து மக்களும் சந்தோஷமாக கொண்டாடுவோம். கும்பாபிஷேகத்திற்கு ஒரு நாள் முதலில் வடக்குத்தி பச்சரிசி மாவு உருண்டை படைத்து இறைவனை விளக்கேற்றி வழிபடுவோம். அன்று இரவு பல ஊர்களில் இருந்து பொதுமக்கள் பலர் எங்கள் ஊருக்கு வந்து தேவராட்டம் காண்பார்கள். அடுத்த நாள் காலையில் துர்க்கை அம்மன் மற்றும் புது அம்மன் கோவிலுக்கு கும்பம் நீர் ஊற்றுவோம். காலை, மதியம், இரவு அன்னதானம் நடைபெறும். அன்று இரவு நாங்கள் குத்து விளக்கேற்றி வழிபடுவோம். தொடர்ந்து அரிச்சந்திர நாடகம் நடைபெறும். அது நள்ளிரவு 4 மணி ஆகிவிடும். அடுத்த நாள் இரவு முத்தாலம்மன் கோவிலுக்கு ஆண்கள், பெண்கள் வேடமிட்டு ஆடுபுலி ஆட்டம் ஆடுவார்கள். மிகவும் அருமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும்.

ஜெ.ரெங்கபூபதி
வகுப்பு 10
சிடார் குழந்தைகள் வள மையம்
மஞ்சநாயக்கன்பட்டி

சிடார் குழந்தைகள் வள மையம் மதுரையை மையமாகக் கொண்டு தூத்துக்குடி, மதுரை மாவட்டங்களில் விளிம்பு நிலை சமூகத்தில் வசிக்கின்ற குழந்தைகளின் கல்வி, படைப்பாற்றல், ஆளுமைத்திறனை வெளிக்கொணர்ந்து , வலுப்படுத்தி சமூகத்தின் மைய நீரோட்டத்தில் பங்கேற்று மாற்றங்களை நிகழ்த்தக்கூடியவர்களை ஒன்றிணைக்கும் பணிகளை செய்து வருகின்றது .



47/23, ‘Thy Grace‘ Old Natham Road (Near Balamandhiram School)
Madurai- 625 014
Phone: 0452 2680701, Mobile; +91 95855 95885, +91 96009 02981
E-Mail: jhccedarnodal@gmail.com, Website: www.cedarindia.org